சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 12.03.2026
வா.சா.2 – தர்மராஜன் S/o ஆண்டி
O.S. No.266/2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

வழக்கு சொத்து மொத்தம் 2 இலக்கம் கொண்டது என்றால் சரிதான். வழக்கு 1ம் இன சொத்தை பொறுத்தவரையில் கண்ணையா என்ற குப்பாரபிச்சன் என்பவரிடம் இருந்து என் அப்பா ஆண்டி கிரையம் பெற்றுள்ளார். 2ம் இன சொத்தை பொறுத்தவரையில் அழகர்சாமி வகையறாவிடம் இருந்து என் அப்பா ஆண்டி கிரையம் பெற்றுள்ளார். மேற்படி கண்ணையா என்ற குப்பாரபிச்சன் அழகர்சாமி ஆகியோருக்கு வழக்கு சொத்துக்கள் பாத்தியம் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வில்லங்க சான்றிதழை தான் தாக்கல் செய்துள்ளோம். UDR ஸ்கீமில் வழக்கு சொத்தை பொறுத்து பட்டா தவறாக என் அப்பா ஆண்டி பெயரில் இருந்ததை பிரதிவாதிகள் தரப்பில் வருவாய்துறை அலுவலரிடம் மனு தாக்கல் செய்து என் அப்பா பெயரில் இருந்த பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். ஆனால் மேற்படி விசாரணையில் என் உடன்பிறந்தவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்படாமலேயே பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள். தற்போது வழக்கு சொத்திற்கான பட்டா விற்பனை செய்யப்பட்டுவிட்டதால் 2ம் பிரதிவாதி உடையப்பன் பெயரிலும் எங்கள் பெயரிலும் இருக்கிறது. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அதன்பிறகு எங்கள் பெயரில் பட்டா வரவில்லை. UDR சர்வேக்கு முன்பாக சர்வே எண்.2/5A ஆயி என்பவரது பெயரில் பட்டா இருந்தது தெரியுமா என்றால் தெரியததாதுங. UDR க்கு பின்பு தான் என் அப்பா பெயரில் வழக்கு சொத்துக்கான பட்டா மாறியிருக்கிறது என்றால்

சரியல்ல. உண்மையான உரிமையாளரிடம் இருந்து என் அப்பா கிரையம் பெறாததால் தான் அவர் பெயரில் இருந்த பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றும் தற்போது வரை பட்டா எங்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.2/5A UDR சர்வேக்கு முன்பாக 1ம் பிரதிவாதி பாண்டியம்மாளின் தாயாரான ஆயி என்பவரது பெயரில் வந்தது என்றும், அந்த பட்டா எண்.1110 என்றால் சரியல்ல. தற்போது சர்வே எண்.2/5A, 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள் பெயரில் பட்டா எண்.2501 வழங்கப்பட்டுள்ளது என்றால் வழக்கிற்கு பின்னிட்டு தான் தெரியும். மேற்படி வழக்கு 2 சொத்துக்களுக்குமே பாண்டியம்மாளின் கணவர் பாலுச்சாமி தான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார். மேற்படி சர்வே எண்.2/5A சொத்தை 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள், 2ம் பிரதிவாதி உடையப்பனுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். சர்வே எண்.2/5A சொத்தானது தற்போது 2ம் பிரதிவாதி உடையப்பன் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. யாருடைய அனுபவத்திலும் இல்லை. JCBயை வைத்து அவர் குழிதோண்ட முற்பட்டார் நாங்கள் தடுத்துவிட்டோம். 2ம் பிரதிரவாதி தான் தற்போது வழக்கு சொத்தை சமன்படுத்தி பிளாட்டுகளாக பிரித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் தடுத்துவிட்டோம். இந்த வழக்கினை பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிப்பதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அதை நாங்கள் தவறாக ஏற்பட்ட பட்டாவின் அடிப்படையில் உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல. அது என் அப்பாவின் கிரைய சொத்தாகும்.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.12 10:17:09 +0530

Sub Judge

Melur